# தெவிநுவர பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கை 2018 ஜூலை 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, தெவிநுவர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான பெக்கோ இயந்திரம் வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 82,283 தொகையினை ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 181,300 தொகை பெறுமதியான உபகரணங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) சபை அலுவலகத்தின் கதவுகள் பொருத்துதல் மற்றும் மலகூட முறைமை தயாரித்தல் ஆகியவற்றிற்கான செலவிடப்பட்டிருந்த ரூபா 276,976 இற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) தொடர்ந்துவரும் ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 180,000 இற்கான கட்டிட வாடகை வருமானத்தை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) பிரதேச சபையின் ஊழியர் ஓய்வுகூடத்தின் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 155,772 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் ஓய்வுகூடம் நிர்மாணித்தல் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 509,228 இற்கான பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) சபை நிதியம் மற்றும் பல்வேறு நிதி ஏற்பாடுகளின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 19 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 1,611,746 தொகை மற்றும் 04 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்பட்டோர் ஏற்பாடுகள் ரூபா 1,394,855 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) கடந்த ஆண்டின் போது கைவிடப்பட்ட 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 2,846,000 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு இறுதி அளவிலும் முன்னைய ஆண்டிற்கான 2 செயற்றிடங்களின் கீழ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத 04 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 3,318,352 இற்கான கடன்பட்டோர் ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கடந்த ஆண்டுகளின் போது மிகையாகக் கணக்கீடு செய்திருந்த கடன் கொடுத்தோர்களை சரி செய்யும் போது 04 நிர்மாண வேலைகள் தொடர்பான ரூபா 403,680 தொகையொன்று கணக்குகளிலிருந்து மிகையாக அகற்றப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களிலுள்ள ரூபா 32,543,700 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்புடைய மீதி மற்றும் அதற்கு உரிய துணைப்பதிவேடு, அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே சமமின்மைகளில் கூட்டுத்தொகை ரூபா 1,256,684 தொகையாகும்.

**1.3.3 தொங்கல் கணக்கு**

2007 ஆண்டிற்கு முன்னர் இருந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் கணக்குகளில் முன்கொண்டுவந்து காணப்படும் ரூபா 821,995 இற்கான மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளை தீர்த்திருக்கவில்லை.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதி கூட்டுத்தொகை ரூபா 14,252,872 தொகைக்கான பலவின கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 5,449,583 தொகைக்கான 15 மீதிகள் அடங்கியிருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 24,672,169 தொகைகள் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 10,845,006 தொகைக்கான 46 மீதிகள் அடங்கியிருந்தன.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பலவின கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,813,229 தொகையாக காணப்பட்டதுடன், அம் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 2,317,560 இற்கான கடன்கொடுத்தோர் மீதி ஒன்று அடங்கியிருந்தது.

(iii) முன்னைய ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வந்து காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,479,593 தொகைக்கான பெறுமதி கூட்டியவரி மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 220,865,190 தொகைக்கான 06 விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

**1.3.6 இணக்கமின்மைகள்**

**1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றம் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 143 | திருப்பி செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் கூட்டப்படும் பிரதான பேரேட்டு கணக்குகளுடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. |
| (ii) விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்த பரிசோதனை செய்து அவற்காக சிறு கையொப்பம் இட்டு உறுதிப்படுத்த வேண்டுமெனினும், அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் செலவு விடயங்களில் உள்ளவாறாக செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறை தொடர்பான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்த்திருக்க வில்லை. |
| (iv) விதி 217 | சபைக்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விபரங்களை உட்படுத்தி பதிவேடொன்று இலக்கம் பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | இழப்புக்கள் சேதங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருந்த போதிலும் வீதி விளக்குகள் பராமரிப்புக்காத பயன்படுத்திய 02 |

| | | |
|---|---|---|
| | | மின்சார டிரக்டர் வண்டிகளின் ரூபா 692,300 இற்கான நட்டத்தை பதிவு செய்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | சபைக்கு சொந்தமான 22 வாகனங்களில் ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 ஜூலை 10 ஆம் திகதிய 2/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | பாவனையில் இருந்து அகற்றப்பட்டுள்ள ரூபா 963,760 கிரயத்தை உடைய 02 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிட்டிருந்த 1992 பெப்ரவரி 26 ஆம் திகதிய 05/01/119/ச ix இலக்க அறிவுரைக் கடிதம் | திட்டக்குழுக் கொடுப்பனவு செலுத்துவற்காக 02 மணித்தியால ங்களை விட மிகையான காலம் கடமை நேரத்திற்கு வெளியே செயற்பட வேண்டுமெனினும் அதற்கு பொருத்தமற்ற வகையில் ரூபா 201,750 இற்காக தொகை 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,179,646 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,055,043 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,357,100 | 5,717,385 | 5,542,818 | 4,095,574 | 5,118,100 | 4,826,189 | 4,402,357 | 3,921,007 |
| வாடகை | 27,965,850 | 21,354,382 | 21,098,163 | 9,773,097 | 24,267,300 | 18,378,473 | 18,633,726 | 9,516,878 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 3,509,500 | 529,864 | 529,864 | - | 902,300 | 601,612 | 601,612 | - |
| ஏனைய வருமானங்கள் | 29,119,550 | 22,036,727 | 8,839,989 | 52,214,986 | 28,428,700 | 26,754,501 | 6,833,912 | 39,018,248 |
| மொத்தம் | 63,952,000 | 49,638,358 | 36,009,594 | 66,083,657 | 58,716,400 | 50,560,775 | 30,471,607 | 52,456,133 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 63,952,000 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 49,638,358 ஆக காணப்பட்டது. ரூபா 52,456,133 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 102,094,491 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 36,010,834 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 66,083,657 ஆக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மற்றும் வரி மீதி ரூபா 3,920,965 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 2,034,318 தொகையாகிய ஆண்டிற்கான சிட்டையிடல் (தண்டம் பணம் உடன்) ரூபா 5,955,283 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 1,859,752 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 4,095,531 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. இம் மீதியில் நிலுவை ஏக்கர்வரி ரூபா 66,427 தொகையும் காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆரம்ப நிலுவை வாடகை மீதி ரூபா 8,511,562 தொகை ஆக காணப்பட்டதுடன், ரூபா 4,602,790 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 13,114,352 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 4,763,774 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 8,350,578 தொகை நிலுவையாக காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 8,350,578 தொகைக்கான நிலுவைத் தொகையில் பழைய வர்த்தக கடைத்தொகுதியில் 16 கடைகள் தொடர்பாக ரூபா 6,451,996 தொகை நிலுவை மீதி காணப்பட்டதுடன் 5 கடைகளின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தது. அந்த கடைகளை அங்கீகாரம் இன்றி அனுபவிக்கும் வாடகையாளர்களிடம் ரூபா 149,098 தொகை நிலுவையாக காணப்பட்டதுடன், வாடகை உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறல் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைத்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,226,746 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 49,988,240 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சபை நிதியத்தில் இருந்து 22 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 1,283,606 இற்கான 06 வேலைத் திட்டங்கள் மாத்திரம் அமுல் நடத்தப்பட்டிருந்தது. பாதீடு செய்யப்பட்ட 16 வேலைத் திட்டங்கள் நிறைவேற்றி இருக்காததுடன், முன்னேற்றம் 13.37 சதவீதமாகிய குறைந்த மட்டத்தை கொண்டிருந்தது. ஆண்டின் போது பாதீடு செய்யப்படாத 17 வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 11,412,337 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) கைவிடப்பட்ட செய்பணிகள்**

உள்நாட்டு நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் மூலதன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2016 ஆண்டில் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த 04 செயற்திட்டங்கள் செயற்படுத்தியிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குப்பைகளை வெளியேற்றுவதற்காக சபையினால் 2014 திசெம்பர் மாதத்தில் ரூபா 2,700,000 தொகை செலவிடப்பட்டு 4 ஏக்கர் காணி பெற்றிருந்த போதிலும், காணியைச் சுற்றி முற்கம்பி அடித்து பாதுகாப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தியிருக்கவில்லை. அதேபோல் 2000 இன் 53 ஆம் இலக்கம், 1988 இன் 56 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்பட்ட 2008 ஜனவரி 25 ஆம் திகதி 1533/16 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக பெற்றிருந்த இந்தக் காணிக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ii) குப்பை சேகரிப்பதற்காக 2017 ஆண்டின் போது ரூபா 12,263,867 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை. சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகளில் உக்கப்படும் குப்பைகள் தனியாக காணியொன்றில் போடப்படுகின்றது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

2014 ஆண்டின் போது ஜேஸீபீ இயந்திரம் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெறவேண்டிய ரூபா 147,000 இற்கான தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவீடு செய்திருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியணித் திட்டத்தில் அங்கிகரிக்கப்பட்டிருந்த பதவிகளில் காணப்பட்ட ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கும் மிகை பதவிகள் 19 முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) திறைசேரி செயலாளரின் 03/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு இணக்கமின்றி 08 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு அவ் ஊழியர்களுக்கு சம்பளமாக ரூபா 4,955,408 தொகையொன்று 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 செயற்பாட்டு திறமையின்மை

மீளாய்வாண்டின் போது 1000 ஐ விட கூடுதலான வீதி விளக்குகள் பராமரிப்புக்காக ரூபா 684,700 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்டிருந்த வீதி விளக்குளின் எண்ணிக்கை 157 ஆக இருந்தமையால் மின்சார சபையினால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீளளிப்பு செய்திருந்த தொகை ரூபா 81,828 தொகையாகும். அங்கீகரிக்கப்பட்ட வரையறையை விட மிகைத்து வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தமையால் சபை நிதியத்தில் இருந்து ரூபா 602,872 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. மின்சார துணைக் கருவிகள் பொருத்துதல் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மேற்பார்வை செய்திருக்கவில்லை.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

தெவிநுவர ஶ்ரீ விஷ்னு தேவாலயத்தில் திருவிழா உடன் நிகழ்வாக பிரதேச சபையினால் நடாத்தப்படுகின்ற எஸல விழாக் கடைகளை வாடகைக்கு கொடுக்கும் போது 2016 ஆண்டின் போது 56 கடை நிலத்துண்டுகள் உரிய நடைமுறைக்கு புறம்பாக ரூபா 626,000 தொகைக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. சந்தை நிலத்தை டென்டரில் கொடுப்பதற்காக செய்தித்தாள் அறிவித்தல் விளம்பரத்திற்காக ரூபா 256,935 தொகையொன்று டென்டர் பெட்டிகள் தயாரிப்பதற்காக ரூபா 42,000 தொகையும் செலவிடப்பட்ட போதிலும் கேள்வி நடைமுறைக்கு புறம்பாக சந்தை நிலம் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.6.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடு சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 06 காணித் துண்டுகள் எதுவித பயன்தரு தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 301,760 பெறுமதியான முச்சக்கர வண்டி, ரூபா 662,000 தொகை பெறுமதியான மின்சார டிரக்டர், பெறுமதி குறிப்பிடப்படாத கை டிரக்டர் ஒரு வருடத்தை விடக் கூடிய காலம் முதல் செயற்படாது காணப்பட்டது. திறைசேரி செயலாளரின் 2015 ஜூன் 10 திகதிய 02/2015 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அவ்வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 24,928,668 தொகை பெறுமதியான மோட்டார் கிரேடர், ரூபா 715,713 தொகை பெறுமதியான நீர் பவுஸர் என்பன குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெவிநுவர தகனசாலைக்கு நுழைவுப் பாதை தயாரிப்பதற்காக ரூபா 923,302 தொகைக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நேர்கூலி அடிப்படையில் நிர்மாண வேலையை பூர்த்தி செய்து ரூபா 921,805 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் நேர் கூலிக் கிரய மதிப்பீடு தயாரித்திருக்கவில்லை. மதிப்பீட்டு பெறுமதியில் ரூபா 138,724 தொகை இலாப எல்லை நேர் கூலி அடிப்படையில் நிர்மாண வேலை மேற்கொண்ட போது சேமித்திருக்கவில்லை.

(ஆ) 2015 பெப்ரவரி 24 திகதி ரூபா 662,000 தொகை பெறுமதியான மின்சார டிரக்டர் விபத்துக்கு உள்ளாகியிருந்ததுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 – 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்காக காப்புறுதி நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மின்சார டிரக்டரை பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தமையால், சபைக்கு ரூபா 662,000 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**3.8 பெறுகைகள்**

**3.8.1 வழங்கள் மற்றும் சேவைகள்**

(அ) 2017 மே 03 திகதி ரூபா 1,765,000 தொகை செலுத்த வீதி விளக்குகள் பராமரிப்பதற்காக புதிய மின்சார டிரக்டர் ஒன்று கொள்வனவு செய்திருந்த போதிலும், அதற்காக பெறுகை செய்முறை உரிய முறையில் கடைபிடித்திருக்கவில்லை. மேலும், விற்பனையின் பின்னர் வழங்கும் சேவைகள் என்பன தொடர்பாக உரிய முறையில் பரிசோதனை மேற்கொள்ளாமையால் கொள்வனவு செய்த அடுத்த மாதமே திருத்த வேலை மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையின் ஊழியர் ஓய்வுகூடம் மற்றும் கழிவறை முறையை திருத்த வேலை நேர்க்கூலி அடிப்படையில் மேற்கொள்வதற்கு ரூபா 665,000 இற்காக மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. களஞ்சியத்திற்கு பண்டங்களுக்கான கட்டளை இடுவதற்கு முன்னர் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்திருத்தல் சிக்கல் தன்மையிலுள்ளது.

**3.8.2 ஒப்பந்த வேலை நிருவாகம்**

2016 ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலை ஒன்றிற்காக மீண்டும் புதிய நிர்மாண வேலை என ரூபா 1,105,029 இற்கான மதிப்பீட்டுப் பெறுமதிக்கு தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருடன் 2017 செப்டம்பர் 08 திகதி முறைசாரா விதமாக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு

ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியமையால் 08 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 26,920,109 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 13 சதவீதம் முதல் 88 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 05 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 19,410,291 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதிகளில் 07 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 4.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) கணக்கீடு